(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1(8).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்
## 2015 திசெம்பர் 04 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2015 திசெம்பர் 16, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

170/ '15

கௌரவ லக்கி ஜயவர்தன,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் 2015 வரையான காலப்பகுதிக்குள் கண்டி மாவட்ட பாடசாலை விளையாட்டு மைதானங்கள் மற்றும் கிராமிய விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துவதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மாவட்டம் முழுவதிலும் மேற்படி நிதியின் மூலம் நிர்மாணிக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி விளையாட்டு மைதானங்கள் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு அமைய தனித்தனியே யாது என்பதையும்;

(v) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதிகள் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விளையாட்டு மைதானங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை பிரிவு ரீதியாக யாவை என்பதையும்;

(iii) வேலைகள் பூர்த்தி செய்யப்படாதுள்ள விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவற்றின் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக மேலும் தேவைப்படுகின்ற நிதி எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி நிதியைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(vi) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

207/ '15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) கண்டி, கெப்பெட்டிபொல மாவத்தை, 14/3 ஆம் இலக்க இடத்தில் அப்போது குடியிருந்த திரு.கே.எஸ். நஜிர்தீன் மற்றும் அவரது குடும்பத்தின் அங்கத்தவர்களுக்கு சொந்தமான வீடு, பஸ்தரிப்பு நிலைய இரண்டாம் கட்ட நிர்மாணிப்புக்காக உடைத்து அகற்றப்பட்டதென்பதையும்;

(ii) திரு. நஜிர்தீன் மற்றும் குடும்ப அங்கத்தவர்களுக்கு பல்லேகெலே, கிராம எழுச்சி நிலப்பரப்பில் அமைந்துள்ள வரிசை வீடு இலக்கம் 02 எனும் இடத்தில் தற்காலிகமாக குடியமர்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும், நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இற்றைவரை நிரந்தர வீடொன்று வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) திரு. நஜிர்தீனின் விதவை மனைவி தனது பிள்ளைகளுடன் தற்போது தெல்தொட்ட, ரலிமங்கொட, 402 ஆம் இலக்க இடத்தில் குடியமர்ந்துள்ளதோடு நகர அபிவிருத்தி அதிகார சபையின் மத்திய மாகாண பிரதிப் பணிப்பாளரின் 5/ஐ8/8/5/11 இலக்கமும் 1997/11/12 ஆந் திகதியும்கொண்ட கடிதம் மூலமாக வாக்குறுதி அளித்துள்ளவாறு குடியமர்வதற்காக கண்டி நகரத்தில் வீடொன்றினை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

218/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) 1990 ஆண்டளவில் இந்நாட்டிலிருந்த மதுபானசாலைகளின் எணிக்கை மற்றும் மதுபான உரிமப்பத்திரங்களைக் கொண்டிருந்த உணவகங்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 1990-1994, 1995-1999, 2000-2004, 2005-2009, 2010-2014 மற்றும் 2015.01.01 முதல் 2015.11.01 வரை,

(i) அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மதுபான உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மதுபான உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்ட உணவகங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மதுபான உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்ட சுற்றுலாத்துறை ஹோட்டல்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும் ஒவ்வொரு காலகட்டத்திற்கும் அமைய தனித்தனியாகவும்;

(iv) மேற்படி (i), (ii) மற்றும் (iii) இல் குறிப்பிட்டுள்ள மதுபான உரிமப்பத்திரங்களை கொண்டுள்ள ஆட்களின் பெயர்ப்பட்டியல், ஏற்புடைய வர்த்தக முகவரிகள் ஆகியவற்றுடன் ஒவ்வொரு காலகட்டத்திற்கும் அமைய தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2015.01.01 முதல் 2015.11.01 வரை இலங்கையில் விற்பனை செய்யப்பட்ட மதுபானத்தின் அளவு, ஒவ்வொரு மாவட்ட ரீதியாக மற்றும் மதுபான வகைகளுக்கிணங்க எவ்வளவென்பதையும்;

(ii) 2013, 2014 மற்றும் 2015 நவெம்பர் 01 வரையிலான காலத்தினுள் அரச வருமானத்திற்கு மது வரி பெற்றுக் கொடுத்துள்ள பங்களிப்பின் பெறுமதி, நிதி ரீதியாக மற்றும் அரச வருமானத்தின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

226/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தின் கீழ் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடிகளையும் ஊழல்களையும் புலனாய்வு செய்வதற்காக விளையாட்டுத் துறை அமைச்சரால் திரு. ரவி அல்கமவின் தலைமையின் கீழ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில் அக்குழு உறுப்பினர்களின் பெயர்கள் யாவை;

(iii) அக்குழு நியமிக்கப்பட்ட திகதி யாது;

(iv) சம்பந்தப்பட்ட குழுவின் அறிக்கையைத் தயாரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு எவ்வளவு;

(v) அவ்வறிக்கை தயாரித்தல் நிறைவு செய்யப்பட்டுள்ளதா; ஆமெனில் அத்திகதி யாது;

(vi) மேற்படி அறிக்கையின் மூலம் இனங்காணப்பட்ட கடுமையான முறைகேடுகள் ஊழல்மோசடிகள் யாவை;

(vii) மேற்படி குழு அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா;

(viii) சம்பந்தப்பட்ட குழு அறிக்கையில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டவர்கள் இருப்பின் அவர்களின் பெயர்கள் யாவை;

(ix) அவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுக்காற்று மற்றும் சட்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

243/ '15

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சர்வதேச நாணய நிதியத்திலிருந்து, 2000 ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை வருடாந்தம் உரித்தாகக் கொள்ளப்பட்ட வி.எ.உ. (SDR) அளவு வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) விசேட எடுப்பனவுக் கணக்கு உரிமை, நாட்டிற்குரிய வெளிநாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றவாறு, இலங்கையினால் பெற்றுக்கொள்ளப்படும் வெளிநாட்டுக் கடன்கள், வெளிநாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றதா;

(ii) இன்றேல், ஏன்?

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கு ஏற்புடையவாறு மேற்கொள்ளப்பட்ட, வெளிநாட்டு கடன் பணிக் கொடுப்பனவுகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் துணைநிலைக் கடன் வசதிகளுக்கான கொடுப்பனவுகள், நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளின் மீது ஏற்படுத்திய தாக்கம் யாது;

(ii) 2000 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கை இது வரை வழங்கிய சர்வதேச இறைமை முறிகளின் அளவு, அவற்றின் வட்டி வீதம் மற்றும் வினைத்திறன் யாது;

(iii) இறைமை முறிகளின் வழங்கல் வெளிநாட்டு ஒதுக்குகளின் மீது ஏற்படுத்திய தாக்கம் யாது;

என்பதை வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2015 திசெம்பர் 17, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

194/ '15

கௌரவ ஜயந்த சமரவீர,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டமை காரணமாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வரும் தவறுகளுக்காக சந்தேக நபர்களாகக் கருதப்பட்டுள்ளவர்கள் மற்றும் தண்டனைக்குட்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ஆ) இவர்களின் பெயர்கள், தவறின் தன்மை, இவர்கள் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைகள் மற்றும் சிறைக்கூடங்களின் இலக்கங்கள் கைதிகளுக்கேற்ப யாவையென்பதை வெவ்வேறாக அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) 2015 சனவரி முதல் 2015 ஒக்டோபர் 20 வரையிலான காலகட்டத்தினுள் பிணை வழங்கப்பட்டுள்ள மற்றும் விடுவிக்கப்பட்டுள்ள எல்.ரீ.ரீ.ஈ. சந்தேகநபர்கள் மற்றும் கைதிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இவர்களின் பெயர்கள், பிணை வழங்கிய அல்லது விடுவித்த நீதிமன்றம், சிறைச்சாலை மற்றும் விடுவிக்கப்பட்ட திகதி ஒவ்வொரு ஆள் சார்பிலும் வெவ்வேறாக யாதென்பதையும் அவர் சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(உ) (i) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாத செயல்களுடன் தொடர்புடைய தவறுகளுக்கு தண்டனை பெற்றவர்களை அரசியல் கைதிகளாக கருதுவதற்கு அரசு தீர்மானித்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு தீர்மானிப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

219/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2015 சனவரி மாதம் 01 ஆம் திகதியளவில் இந்நாட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த அரச சார்பற்ற அமைப்புகள் (NGO) மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் (INGO) யாவையென்பதையும்;

(ii) மேற்படி அமைப்புகளின் முகவரிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) 2015.01.01 ஆம் திகதி முதல் 2015.11.01 ஆம் திகதி வரை இந்நாட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ள அரச சார்பற்ற அமைப்புகள் (NGO) மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் (INGO) யாவையென்பதையும்;

(ii) மேற்படி அமைப்புகளின் அமைப்பாளர்களது இணைப்புத் தகவல்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) மேற்படி அமைப்புகளுக்கு,

(i) 2000.01.01 ஆம் திகதி முதல் இற்றைவரை கிடைத்துள்ள வருடாந்த நிதியுதவிகள் எவ்வளவென்பதையும்;

(ii) இவ்வுதவிகளை வழங்கியுள்ள வெளிநாட்டு அரசுகள் அல்லது அமைப்புகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிதியுதவிகளை வழங்கியுள்ள வெளிநாட்டு அரசுகள் மற்றும் அமைப்புகள் சம்பந்தப்பட்ட நிதியுதவிகளை வழங்கியுள்ளதன் குறிக்கோள்கள் யாவையென்பதையும்;

ஒவ்வொரு அமைப்பு சார்பிலும் வெவ்வேறாக அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

230/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டின் பிற்பகுதி வரையான காலத்தில் யாழ்ப்பாண லொறி உரிமையாளர்களிடமிருந்து அரசியல் அழுத்தத்தின் பேரில் "மகேஸ்வரி மன்றம்" எனப்படும் அமைப்பினால் நாளாந்தம் பணம் சேகரிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) போக்குவரத்து தடவை ஒன்றுக்காக ரூபா. 300.00 தொகை பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) லொறி உரிமையாளர்கள் சங்கத்தின் கடுமையான அதிருப்திக்கு மத்தியிலும் நாளாந்தம் பணம் சேகரித்த மகேஸ்வரி மன்றம் எந்த அரசியல்வாதியின் அதிகாரத்துடன் செயற்பட்டது என்பதையும்;

(iii) மகேஸ்வரி மன்றம் சட்டரீதியானதொரு நிறுவனமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2010 - 2014 காலப்பகுதியில் பற்றுச் சீட்டு வழங்கி லொறிகளிலிருந்து நாளாந்தம் சேகரித்த பணத்தொகை யாதென்பதையும்;

(ii) மகேஸ்வரி மன்றம் ஏதேனும் அரச நிறுவனமொன்றினால் மேற்பார்வை செய்யப்பட்டதா என்பதையும்;

(iii) அதனூடாக லொறி உரிமையாளர்களுக்கு கிடைத்த சலுகை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) (i) இவ்வாறு உத்தியோகபூர்வமாக கப்பம் பெற்றுக்கொண்டமைக்கு எதிராக யாழ்ப்பாண லொறி உரிமையாளர்கள் சங்கம் நிதிக் குற்றச்செயல்களை புலனாய்வு செய்யும் பிரிவில் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(ii) சட்ட விரோதமான முறையில் சேகரிக்கப்பட்ட பணத்தை சம்பந்தப்பட்ட லொறி உரிமையாளர்களுக்கு மீளப் பெற்றுக்கொடுக்க இடையீடு செய்வாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

244/ '15

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2000 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையில்,

(i) இலங்கைக்கு சொந்தமான தேறிய வெளிநாட்டு ஒதுக்குகளின் நிலைமையிலான மாற்றம் யாது;

(ii) சென்மதி நிலுவை கையேட்டின் 6ஆவது திருத்தத்தின் பிரகாரம், "ஒதுக்குச் சொத்துக்களின் நிலைமை" மற்றும் "ஒதுக்குகள் சார்ந்த பொறுப்புக்களின் நிலைமை" யாது;

(iii) BPM6 இற்கு ஏற்ப சீராக்கப்பட்ட இலங்கை சென்மதி நிலுவையின் முழுமொத்த மீதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

246/ '15

கௌரவ மஹிந்தானந்த அளுத்கமகே,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) (i) சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபைக்கு 2015.01.30 ஆம் திகதிக்குப் பின்னர் நியமிக்கப்பட்ட தவிசாளரால் கடந்த 10 மாத காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட மாதாந்த சம்பளம்/ எரிபொருள் மற்றும் கொடுப்பனவுகள் வெவ்வேறாக யாது;

(ii) தமக்கு உரித்தான சம்பளம்/ எரிபொருள் மற்றும் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக தவிசாளரால் ஏதேனும் பணம் / கொடுப்பனவு பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பின், அவை மீள அறவிடப்படுமா;

(iii) 2015.01.30 முதல் 2015.10.30 வரையிலான காலப்பகுதியினுள் வைபவங்களுக்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2015 திசெம்பர் 18, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

53/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தின் உதவியுடன் பேணிவரப்படுகின்ற மத அமைப்புக்களின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவ்வெண்ணிக்கை ஒவ்வொரு மதத்தின்படி தனித்தனியாக எவ்வளவு;

(iii) மேற்படி கல்வி நிறுவனங்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே, (அ) (iii) இல் குறிப்பிடப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பயில்கின்ற மாணவ மாணவிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நிறுவனத்திற்கமைய தனித்தனியாக எவ்வளவு;

(ii) மேற்படி கல்வி நிறுவனங்களின் பதவியணிகளின் உள்ளடக்கம் யாது;

(iii) மேற்படி நிறுவனங்களுக்காக அரசாங்கம் ஆண்டொன்றுக்கு செலவிடுகின்ற பணத்தொகை ஒவ்வொரு நிறுவனத்திற்கமைய தனித்தனியாக எவ்வளவு;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

195/ '15

கௌரவ விஜித ஹேரத்,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) (i) வவுனியா மாவட்டத்தின் போகஸ்வெவ வலயத்தில் யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்தவர்களை மீள் குடியமர்த்துவதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் 312 குடும்பங்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இவ்வேலைத்திட்டத்தின் கீழ் இவர்களுக்கு 1 ஏக்கர் உலர் நிலமும் 1 ஏக்கர் வயற்காணியும் பெற்றுக்கொடுக்க உத்தேசமாயிருந்தது என்பதையும்;

(iii) தற்போது 3 வருடங்கள் கடந்துள்ள போதிலும், மேற்கூறப்பட்டவாறு காணியெதுவும் வழங்கப்படவில்லையென்பதையும்;

(iv) தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளதால் இவர்கள் மிகவும் நிர்க்கதியான நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த நிலைமையை சீர்செய்வதற்கு துரித நடவடிக்கைகளை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

248/ '15

கௌரவ மஹிந்தானந்த அளுத்கமகே,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 – 2014 ஆண்டு காலத்தில் சுகததாச தேசிய விளையாட்டுக்கள் தொகுதி அதிகார சபை வினைத்திறன்மிக்க வகையில் பேணப்பட்டமையால் C மட்டத்திலிருந்து B மட்ட அரச நிறுவனமாக தரமுயர்த்தப்பட்டதென்பதையும்;

(ii) கடந்த 10 மாதத்தில் இதன் நிர்வாக வினைத்திறனின்மையால் மீண்டும் C மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நிறுவனத்தை மீண்டும் சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

253/ '15

கௌரவ பிமல் ரத்நாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு தூதுக் குழுக்களின் அலுவலகங்கள் அமைந்துள்ள நாடுகள் அத்துடன் உப அலுவலகங்கள் (Consulates) அமைந்துள்ள நாடுகள் மற்றும் நகரங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு வெளிநாட்டு தூதுக்குழுவின் பிரதானிகளினதும் பிரதித் தூதுக்குழுப் பிரதானிகளினதும் பெயர்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி (அ) (ii) இல் குறிப்பிடப்படுகின்றவர்களில் நிரந்தர இலங்கை வெளிநாட்டுச் சேவையைச் சார்ந்தவர்கள் மற்றும் சாராதவர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) இலங்கை வெளிநாட்டு சேவைக்கு ஏற்புடையதல்லாத தூதுக்குழு பிரதானிகள் மற்றும் பிரதிப் பிரதானிகள் பணியாற்றும் நாடுகள் யாவையென்பதையும்;

(v) 2015.01.08 ஆம் திகதிக்கு பின்னர் வெளிநாட்டு தூதுக்குழுக்களுக்கு தூதுக்குழு பிரதானிகளாகவும் பிரதிப் பிரதானிகளாகவும் நியமிக்கப்பட்டவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(vi) இவர்களில் இலங்கை வெளிநாட்டுச் சேவையைச் சார்ந்த மற்றும் சாராதவர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

260/ '15

கௌரவ (டாக்டர்) ஏ. ஆர். ஏ. ஹபீஸ்,— மாநகர, மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் கொலொன்னாவை பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய பிரண்டியாவத்த, வெலேவத்த மற்றும் வென்னவத்த பகுதிகள் தாழ் நிலப் பிரதேசமாகும் என்பதையும்;

(ii) அந்தப் பகுதிகள் ஊடாக கால்வாய்கள் நீண்டகாலமாக துப்பரவு செய்யப்படாத காரணங்களினால் மழைக்காலங்களில் பிரதேசத்தின் வீடுகள், வர்த்தக நிலையங்கள், வணக்க ஸ்தலங்கள் உட்பட வீதிகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்குகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கால்வாய்களைத் துப்பரவு செய்ய அறிவுரை வழங்குவாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

268/ '15

கௌரவ உதய கம்மன்பில,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஐக்கிய இராச்சியத்தின் இலங்கை உயர்ஸ்தானிகர் பதவிக்கு இன்றளவில் ஆளொருவர் நியமிக்கப்பட்டிருப்பின்,

(i) மேற்படி ஆளுடைய பெயர் யாதென்பதையும்;

(ii) இவர் நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) இவர் நியமிக்கப்படுவதற்கு முன்னர் எவ்வளவு காலம் பதவி வெற்றிடமாக இருந்ததென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் இலங்கை உயர்ஸ்தானிகர் பதவிக்கு இன்றளவில் ஆளொருவர் நியமிக்கப்படவில்லையெனில்,

(i) மேற்படி பதவி எவ்வளவு காலம் வெற்றிடமாக உள்ளதென்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி பதவி வழங்கப்பட்டதன் பின்னர் ஏற்பதை நிராகரித்த ஆட்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி ஆட்கள் பதவியை ஏற்க நிராகரித்தமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இப் பதவி நீண்ட காலமாக வெற்றிடமாக இருப்பதற்கான காரணத்தை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2015 திசெம்பர் 19, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

255/ '15

கௌரவ பிமல் ரத்நாயக்க,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) 2010, 2011, 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில்,

(i) பொலிசாருக்குக் கிடைத்துள்ள சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) நீதிமன்றங்களில் காணப்படுகின்ற சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே எத்தனை என்பதையும்;

(iii) சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக பொலிஸ் "பி" அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அவற்றுக்கான குற்றப்பத்திரங்கள் வழங்கப்படாத, சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு உரித்தான வழக்குகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

257/ '15

கௌரவ இஷாக் ரஹுமான்,— நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) கடந்த காலத்தில் தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக அதிகமாக பாதிப்புக்குள்ளாகிய அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதான 61 நீர்த்தேக்கங்களை புனரமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பதவிய விவசாய குடியேற்றத்தின் நீர்ப்பாசன முறைமை 40 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படவில்லையென, பதவிய ஒன்றிணைந்த விவசாய அமைப்பின் தலைவரினால் அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) முழுமையான விவசாய பிரதேசமாகிய பதவிய பிரதேசத்திற்கு ஒவ்வொரு போகத்தின் போதும் உரியவாறு மழை வீழ்ச்சி கிடைப்பதால் இந்த நீர்ப்பாசன திட்டத்தை உரியவாறு புனரமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

265/ '15

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு சனவரி 08 ஆம் திகதிக்குப் பின்னர் ஆட்சிப் பீடமேறிய அரசாங்கம் தேசிய நிறைவேற்றுச் சபையொன்றை அமைத்ததென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) தேசிய நிறைவேற்றுச் சபையின் நோக்கங்களை் யாவை என்பதையும்;

(iii) அதன் உறுப்பினர்களது பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) இவர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டார்கள் என்பதையும்;

(v) குறித்த நியமனங்களின் நியமன அதிகாரி யார் என்பதையும்;

(vi) மேற்படி உறுப்பினர்களின் நியமனம் அரசியலமைப்பு அல்லது நாட்டில் வலுவிலுள்ள எச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) தேசிய நிறைவேற்றுச் சபை கூடிய தடவைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) குறித்த கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் யாவை என்பதையும்;

(iii) தேசிய நிறைவேற்றுச் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நிறைவேற்றுச் சபை இன்றளவிலும் நடைமுறையில் உள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) எவரேனும் பிரஜையை கைதுசெய்யுமாறு பொலிசாருக்கு கட்டளையிட தேசிய நிறைவேற்றுச் சபைக்கு அதிகாரம் உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அது எச்சட்டத்தின் கீழ் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) தேசிய நிறைவேற்றுச் சபையானது அரசியல் தலைவர்களை அவமதிப்பதற்கென அமைக்கப்பட்ட சட்டவிரோத அரசியல் கருவியென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

269/ '15

கௌரவ உதய கம்மன்பில,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) வொக்ஸ்வெகன் மோட்டார் வாகன கம்பனி இலங்கையில் பாரிய முதலீட்டை மேற்கொள்வதாக பிரதம அமைச்சர் வெளியிட்டுள்ள கூற்றைப் பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட கம்பனி இந்நாட்டில் முதலீட்டை மேற்கொள்வதற்காக இலங்கை முதலீட்டுச் சபைக்கு விண்ணப்பப் பத்திரத்தை அல்லது கருத்திட்ட அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளதா;

(ii) மேற்குறிப்பிட்ட கம்பனி இந்நாட்டில் முதலீடு செய்யும் மொத்தப் பணத்தொகை யாது;

(iii) இதன் மூலம் உருவாக்கப்படும் வேலைவாய்ப்புக்களின் எண்ணிக்கை யாது;

(iv) தற்போது மேற்குறிப்பிடப்பட்ட கருத்திட்டத்தின் முன்னேற்றம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

278/ '15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட துறைமுக நகரக் கருத்திட்டம் அமுல்படுத்தப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென புதிதாக சாத்தியக்கூற்று அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்துக்கு மீண்டும் கேள்விப்பத்திரம் கோரல் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், முன்னைய கம்பனியினால் இதற்கு விண்ணப்பிக்க முடியுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் எமது நாட்டுக்கு கிடைக்கும் பயன்கள் யாவை என்பதையும்;

(ii) கருத்திட்ட நிர்மாணிப்புகளிலிருந்து பொதுமக்களுக்குக் கிடைக்கும் பயன்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டம் அமுல்படுத்தப்படுமாயின், அமுல்படுத்தப்படுகின்ற காலஎல்லை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?